Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 56

சனிக்கிழமை 21 ஜனவரி 2023

தை 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053


# 13க்கு மறுக்கும் அரசாங்கம் எப்படிச் சமஷ்டியைத் தரும்?

## தமிழ்க் கட்சிகளிடம் கேள்வி எழுப்பிய ஜெய்சங்கர்
## பலாலி விமான நிலையம் தொடர்பில் சாதகப் பதில்

**யாழ்ப்பாணம், ஜனவரி 21**

**அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தையே நடைமுறைப் படுத்தாத அரசாங்கம் எப்படி நீங்கள் அதற்குமேல் கோரும் சமஷ்டித் தீர்வை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர்.**

»10



## முட்டை 44 ரூபா


### வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 21

முட்டை விலை தொடர்பான புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வெள்ளைமுட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

»10



## தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியாக்கியது இந்தியா!

யாழ்ப்பாணம், ஜன. 21

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஓரணியாகச் சென்றனர். அவ்வாறு ஓரணியாகச்

»11

யாழ்ப்பாண மாநகர முதல்வராக

## மீண்டும் ஆர்னோல்ட்; இன்று வர்த்தமானி?

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இ.ஆர்னோல்டை நியமித்து இன்றையதினம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

»10

ஒற்றையாட்சிக்குள்

## 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவே முடியாது!!!

### ஜெய்சங்கருக்கு நேரில் எடுத்துரைத்ததுடன் கடிதத்தையும் கையளித்தார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் 13ஆம் திருத்தத்தை முழுமையாக ஒரு போதும் நடைமுறைப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டு அது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்களையும் எடுத்துக்கூறி விளக்கியதுடன், கடிதம் ஒன்றையும் இந்திய வெளிவிவ

»10

## இலங்கைக்கு முழு ஆதரவு

### ஜெய்சங்கர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

நம்பகமான ஓர் அயல்நாடாகவும் பங்காளியாகவுள்ள இந்தியா, தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கைக்

»10

திறைசேரியால்

## தேர்தல் செலவுகளை தாங்கவே முடியாதாம்!

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

தேர்தல் செலவுகளை ஏற்கும் இயலுமை திறைசேரிக்கு இல்லை. தற்போதுள்ள நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் செலவுகளையும் திறைசேரி ஏற்கும் பட்சத்தில் அது அரச நிதி

»10

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 4 அல்லது மார்ச் 9

வேட்புமனு ஏற்பு இன்று கடைசிநாள்
முக்கியமான கட்சிகள் இன்றே தாக்கல்

விரிவு:- பக்.10

## அரசாங்கம் ஏமாற்றுகிறது

### ஜெய்சங்கரிடம் முறையிட்ட சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன. 21

அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும்

»11


## 'சுமந்திரன் அணி' நேற்று சுயேச்சையாக வேட்புமனு

### கிளிநொச்சியில் தமிழரசு பிளவு!

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனிவழியமைத்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் பிளவு ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சியில் அந்தக் கட்சியின்

»11



## கோரவிபத்தில் 7 பேர் சாவு! 47 பேர் மருத்துவமனையில்!

கொழும்பு, ஜன. 21

பாடசாலை மாணவர்களை சுற்றுலாவுக்கு ஏற்றிச் சென்ற பேருந்து, வாகனம் மற்றும் ஓட்டோ என்பவற்றை மோதித்தள்ளி விபத்துக்குள்ளானதில் வாகனத்தில் பயணித்த 6 பேரும் ஓட்டோவில் பயணித்த ஒருவருமாக மொத்தம் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

»11

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கொலைமிரட்டல் அச்சுறுத்தல்

## தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பகம் கண்டனம்

கொழும்பு, ஜன. 21

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது என தேர்தல் வன்முறை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

தேர்தல்கள் ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமா செய்யாதுவிட்டால் பெரும் விளைவை எதிர்நோக்க நேரிடும் என்று ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களுக்கு சமூக வலைத்தளம் ஊடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு பல்வேறு தரப்பினராலும் சதி முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில் இந்தச் சம்பவம் அந்த முயற்சிகளுடன் தொடர்புடையதாக இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய ஜனநாயக விரோத வன்செயல்களை தேர்தல் வன்முறை கண்காணிப்பகம் கண்டிக்கின்றது.

இதுதொடர்பிலான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் பாதுகாப்பான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# குடும்பத்தலைவர் மாயம் பொலிஸில் முறைப்பாடு



மன்னார், ஜன. 21

வேலைக்குச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் காணாமற்போயுள்ளார் என்று முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் உள்ள 4 பிள்ளைகளின் தந்தை காணாமற்போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வேலைக்குச் செல்வதாக கூறிச் சென்றவர் வீடு திரும்பவில்லை என்று மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய முருங்கன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-213)

# கொலை அச்சுறுத்தல்; விசாரணைகள் துரிதம்

## குற்றப்புலனாய்வு முன்னெடுப்பு

கொழும்பு, ஜன. 21

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவருக்கு கடந்த புதன்கிழமை கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

முறைப்பாட்டுக்கமைய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அவர்களின் பாதுகாப்புக்காக அவர்களது வீடுகளுக்கு பாதுகாப்பளிக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மூத்த பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ச-இ)

FMM நிදහස් මාධ්‍ය ව්‍යාපාරය சுதந்திர ஊடக இயக்கம் Free Media Movement

# "கறுப்பு ஜனவரி" எதிர்வரும் 24 இல்

## சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு

கொழும்பு, ஜன. 21

சுதந்திர ஊடக இயக்கம் வருடாந்தம் நடத்தும் "கறுப்பு ஜனவரி" நிகழ்வு "ஊடகத் தொழிற்துறையினரைப் பாதுகாக்க ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம்" என்ற தொனிப்பொருளில் பொரளை நாமல் மாலினி புஞ்சி தியேட்டரில் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் நடைபெறவுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் லசந்த டி சில்வாவால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமற்போன ஊடகவியலாளர்களுக்கு இதுவரை நீதி கிட்டாத பின்னணியில் ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்விமான்களுடன் இணைந்து சுதந்திர ஊடக இயக்கம் வருடாந்தம் தொடர்ச்சியாக "கறுப்பு ஜனவரி" நிகழ்வை நடத்திவரும் நிலையில் இந்த ஆண்டும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமற்போன ஊடகவியலாளர்களை நினைவுகூர்ந்த பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஹனா இப்ராஹிம், சிரேஷ்ட ஊடகவியலாளர் பரமேஸ்வரன் நவரட்ணம், சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும ஆகியோர் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நிகழ்த்தவுள்ளார்.

கருத்து உரிமை, கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்கு ஆதரவளிக்கும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-14-60)

# வர்த்தக நிலையத் தாக்குதலுக்கு வெளிநாட்டிலிருந்து பணம்

## கல்வியங்காடு சம்பவத்தின் ஆரம்ப விசாரணையில் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 21

கல்வியங்காடு சந்தியிலுள்ள வர்த்தகநிலையம் ஒன்றின் மீது வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பணத்துக்காகவே தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு சந்தியிலுள்ள வர்த்தக நிலையம் மீதும் உரிமையாளர் மீதும் கடந்த புதன்கிழமை வன்முறைக் கும்பலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் ஆரம்பித்தனர். அதன் ஆரம்பகட்ட விசாரணையில் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பணத்துக்கே யாழ்ப்பாணத்தில் செயற்படும் வன்முறைக் கும்பல் ஒன்று வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் விவரங்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார். தடயவியல் பொலிஸார் மற்றும் கோப்பாய் பொலிஸார் ஆகியோர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சி.சி.ரி.வி காணொலிகளின் அடிப்படையில் தாக்குதல் குழுவைக் கைது செய்ய விசேட அணி களமிறக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-14-26)

# மேயர் வேட்பாளராகக் களமிறங்க பதவி விலகினார் முஜிபூர் ரஹ்மான்

கொழும்பு, ஜன. 21

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று விலகினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை நிகழ்த்தியபோதே இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உள்ளாட்சிமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே எமது கட்சியின் செயற்குழு எடுத்த முடிவின் பிரகாரம், கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றேன்.

அத்துடன், தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அது பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே, தேர்தலைப் பிற்போடாமல், தடங்கல்களை ஏற்படுத்தாமல், தேர்தலை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பையும் அரசாங்கம் வழங்க வேண்டும் - என்றார். (ஒ-14-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனியை கர்ப்பமாக்கியவருக்கு 39 வருட கடூழிய சிறைத்தண்டனை

கொழும்பு, ஜன. 21

அம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராம பகுதியில் 12 வயதான மைத்துனியைக் கர்ப்பமாக்கிய நபருக்கு 39 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவரின் மனைவி சத்திர சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரின் இரண்டரை வயதுக் குழந்தையை அவரது 12 வயது சகோதரி பராமரித்து வந்தார். மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாள் முதல், சந்தேகநபர் பல சந்தர்ப்பங்களில் மைத்துனியை கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். சிறுமி கர்ப்பமானது தொடர்பில் திஸ்ஸமஹாராம பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் சந்தேகநபர் திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிரான விசாரணையின் பின்னர், சட்டமா அதிபர் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றில் 3 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தார். குறித்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 13 வருடங்கள் வீதம் 3 குற்றச்சாட்டுகளுக்கு 39 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து அம்பாந்தோட்டை மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். அத்துடன் சந்தேகநபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும், 2 அரை லட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-14,இ)

# தமிழரசுக் கட்சியின் தவறை தேர்தல் வெற்றி உணர்த்தும்

## புதிய கூட்டணி கட்டியம்

வவுனியா, ஜன. 21

விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டான கூட்டமைப்புக்கே மக்கள் வாக்களித்தனர் என்பதை இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு தேர்தல் முடிவுகள் உணர்த்தும் – இவ்வாறு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவட்ட செயலகத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று கட்டுப்பணம் செலுத்தியது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது: வீட்டுச் சின்னத்துக்கு அல்ல விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பினருக்கே மக்கள் வாக்களித்தனர்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றை இணைத்து புதிய கூட்டணியாக குத்து விளக்குச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். மக்களால் சின்னத்துக்கே வாக்கு கிடைக்கிறது என்ற பிழையான முடிவை தமிழசுக்கட்சியினர் இன்று எடுத்துள்ளனர். ஆனால் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக் கருதியே வாக்குகளை வழங்கினர் என்பதை இந்தத் தேர்தல் நிரூபிக்கும்.

தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பானது தமிழரசுகட்சியின் பிளவால் ஒரு போதும் பின்னடைவை சந்திக்காது. தமிழரசுக்கட்சி செய்த வரலாற்று பிழையை எமது வெற்றியானது புலப்படுத்தும். மீண்டும் அவர்கள் எம்முடன் இணைய இந்தத் தேர்தல் வாய்ப்பளிக்கும் - என்றார். (ச-110)

## புதிய வரிக் கொள்கை: அரசாங்கமே நீக்கு!

### கொழும்பில் போராட்டங்கள்

புதிய வரித் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வங்கி ஊழியர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட தொழிற்றுறையினரால் இந்த எதிர்ப்புப் போராட்டம் இருவேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டது.


அரசாங்கத்தின் தன்னிச்சையான வரிக்கொள்கை நீக்கப்பட வேண்டும். ஊதியத்தில் வரிவிதிப்பு அநீதியா கும். மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

# விடுதலைப் புலிகளின் பிளவுக்கு பிள்ளையார் சுழி போட்டது நாமே

### மார்தட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிளவுக்கு தனது தந்தையான ரணசிங்க பிரேமதாஸவே அடித்தளமிட்டார் என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய சஜித், அதில் ஒரு கட்டத்தில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவரும் பஸ்கள் மற்றும் உதவிகள் தொடர்பில் பட்டியலிட்டார். அதன்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் மாத்தயா, யோகியை பிளவு படவைக்கவே தனது தந்தையின் காலத்தில் சில உதவிகள் செய்யப்பட்டன என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, உங்கள் தந்தையான பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு திறைசேரி ஊடாகக் காசோலைகள் வழங்கப்பட்டன. அதற்கு நன்றிக்கடனாகவே தற்போது வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் உங்களுக்கு நிதியுதவி வழங்குகின்றனர். அதை வைத்துத்தான் நீங்கள் இவ்வாறு பஸ்களை அன்பளிப்புச் செய்கின்றீர்கள் என மக்கள் பேசிக்கொள்கின்றனர் - என்றார்.

அதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதாஸ, இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பெயர்ட் பவர் என்பவர் ஹிட்லரின் படைகளுக்கும் முசோலினியின் படைகளுக்கும் ஆயுதங்களை வழங்கி உதவினார். இது இரு அணியில் உள்ளவர்களையும் பிளவுபடுத்தும் தந்திரம். அதே போன்றுதான் விடுதலைப்புலிகள் அமைப்பில் அதன் தலைவர் பிரபாகரனோடு மாத்தயாவும் யோகியும் முரண்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் சில உதவிகளை வழங்கி அவர்களை மேலும் பிளவடைய வைக்கப்பட்டது - என்றார். (ஒ-14,இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 09 - 1957



மறைவு 18 - 01 - 2023

### திருமதி பராசக்தி சண்முகவேல்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சண்முகவேல் அவர்கள் கடந்த (18.01.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - சித்திரவல்லி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நடராசா சண்முகவேல் (சின்னண்ணை) அவர்களின் அன்பு மனைவியும், கிருபாகரன் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), பரந்தாமன் (பரந்தி), தேவகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கார்த்திகா (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்), வசந்தினி ஆகியோரின் மாமியாரும், அப்சரா, ஆருஜன், அஸ்மி, அக்ஸான், அக்சயா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களத்தடி, சங்கரத்தை. 077 466 9641, 077 908 0435

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகு கிறது.



கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு ஜன்மச் சனி ஆரம்பமாகிறது. கும்பம் சனி பகவானுக்குச் சொந்த வீடு. ஆகவே நன்மைகளையே வழங்குவார். எனினும் நாம் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருந்தால், எல்லாம் நன்மையாகவே நடக்கும். பணவிவகாரம், ஆரோக்கியம், திருமணம் போன்ற விடயங்களில் பலமுறை யோசித்து முடிவெடுக்கவும். வேலை தேடும் நிலையில் உள்ளவர்கள், மாணவ மாணவிகள், வயதானவர்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். கடன் பெறுவது, கடன் கொடுப்பது இரண்டையுமே இயன்றவரையிலும் தவிர்க்கலாம். மேலும் சொத்துகள் வாங்கும்போது பத்திரங்களைச் சரிபார்ப்பது மிக அவசியம். கும்ப ராசி அன்பர்களுக்கு, ஜன்மச் சனி நன்மைகளே அளிப்பார் என்றாலும், சற்றுப் பாடத்தையும் கற்றுத் தருவார். ஆகவே, தினமும் அவரைத் தியானித்துவிட்டுச் செயற்பட்டால், சகலமும் நன்மையாக நடக்கும்.

**பெண்களுக்கு:** வேலைப்பளு அதிகரிக்கும்; பொறுப்புகள் கூடும். இந்த ராசியைச் சேர்ந்த பெண்கள், எப்போதுமே உழைக்க அஞ்சாதவரகள். எனினும் தற்போது மனம் சலிக்கும் அளவுக்கு வேலை அதிகரிக்கும். மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்கவேண்டியது வரலாம். உங்களின் மன உறுதியும், தைரியமும் எல்லா காரியங்களிலும் பலம் சேர்க்கும். உடல் ஆரோக்கியத்திலும் சற்றுக் கவனம் செலுத்துங்கள்.

**மாணவர்களுக்கு:** நீங்கள் படிப்பில் அதிக அக்கறை காட்ட வேண்டும். விளையாட்டுத் துறையில் சாதனை புரிவீர்கள். பாட்டு, நடனம், இயல், இசை போன்றவற்றிலும் ஆர்வம் அதிகரிக்கும். உங்கள் முயற்சி வெற்றி பெறும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. சோம்பேறித்தனத்தை விட்டால், வாழ்க்கையில் முன்னேறலாம்.

**உத்தியோகத்தர்களுக்கு:** இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் வாக்கில் அதீத கவனம் தேவை. பேச்சால் பிரச்சினைகள் எழலாம். ஆகவே, பணியிடங்களில் நாவடக்கத்துடன் நடந்துகொள்ளுங்கள். எவரிடமும் எடுத்தெறிந்து பேசுவதைத் தவிர்க்கவும். இயன்றவரையிலும் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லுங்கள். புதிய வேலை தொடர்பான சில முயற்சிகள் ஏமாற்றத்தைத் தரலாம்.

**வியாபாரிகளுக்கு:** புது வியாபாரம், கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. ஆவணங்களில் கையெழுத்து இடுவது, ஒப்பந்தங்கள் செய்வது தொடர்பானவற்றில் கவனம் தேவை. புதிய கடன் முயற்சிகள் வேண்டாம். தன லாபம் உண்டு. சிறு தொழில் செய்பவர்களுக்கு நல்ல காலம் இது.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் சனி பகவானை வணங்கலாம். சக்கரத் தாழ்வாருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்யலாம். சனிப் பிரதோஷ காலத்தில், சிவனையும் நரசிம்மரையும் வணங்கி வழிபட்டால், எல்லா வளமும் கிடைக்கும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

# விலகல் வரி அறவீடு; தகவல் பொய்யானது

## விமான சேவைகள் சபை தெளிவுபடுத்தல்

கொழும்பு, ஜன. 21

நாட்டிலுள்ள சர்வதேச விமான நிலையம் அல்லது துறைமுகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்வோருக்கு 60 டொலர் வரி விதிக்கப்படும் என வெளியான செய்தி உண்மையல்ல என சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் நாட்டை விட்டு வெளியேறும் மக்களுக்கு புதிய வரிகளை விதிக்கவில்லை.

இந்த வரியானது ஏற்கனவே கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் தனியாக ஒரு கட்டணம் வரியாக அறவிடப்படாது என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார். (ச-இ)


**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரப் பகுதியில் இருகக்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர், (Cashier) காசாளர் தேவை.

T.P: 077 5768321

**உழவர் அரிசிக்கடை**

மருதனார் மடம் சந்தை

**மலிவு விற்பனை**

உழவர்-ஆட்டக்காரி அரிசி -10 கிலோ வாங்குவோருக்கு 1 கிலோ அரிசி இலவசம்

1 Kg Rs.230.00/- 10 Kg Rs. 2250.00/-

25 Kg Rs.5600.00/- 50 Kg Rs. 11200.00/-

1 Kg பாரை கருவாடு Rs.2080.00/-

நெத்தலி கருவாடு 1 Kg Rs. 1240.00/-

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளையில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- தெல்லிப்பளை வைத்திய சாலையில் இருந்து 500M தூரத்தில்
- பலாலி விமான நிலையம் செல்லும் வீதி.
- செம்மண் காணி. நல்ல தண்ணீர் ஊற்று நிலம்

பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:

077 638 5683, 076 755 8606


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதுவும் இன்னொரு கண்துடைப்பே...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றும்போது உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்குவது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ''சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப்படவேண்டும்'' எனவும் கூறியிருந்தார். இதே ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பிரதமராக இருந்தபோது யாழ்ப்பாணத்தில் நடந்த தேசிய தைப்பொங்கல் விழாவில் சர்ச்சைக்குரிய கருத்தை முன்வைத்திருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என்று அவர் தெரிவித்திருந்தார். இப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப்படவேண்டும் எனக் கூறுகிறார். அதற்காக உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.


விடையை எழுதிய பின்னர் அதற்கான கேள்வியை உருவாக்குவதைப்போன்றுதான் ரணில் அரசாங்கத்தின் செயற்பாடும் அமைந்திருக்கின்றது. தங்களது விடைக்கு ஏதுவான கேள்வியைத்தான் அவர்கள் எழுதப்போகின்றார்கள். இதனால்தான் இந்த நாட்டில் போரால் பாதிக்கப்பட்ட தரப்பான – தமிழ் மக்கள் எப்போதும் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் படையினரிடமே சரணடைந்திருந்தார்கள், ஏனையோர் பாதுகாப்புத் தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளேயே பலவந்தமாகக் கடத்தப்பட்டிருந்தார்கள். எனினும் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்தபோது தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பிரச்சினையை இதய சுத்தியோடுதீர்க்க விரும்பியிருந்தால், காணாமலாக்கப்பட்டோரின் உயிரிழப்புக்கு காரணமான படைத் தரப்புக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டுமே? ஆனால் அவ்வாறு செய்யாமல், இன்னுமோர் ஆணைக்குழுவை அமைத்துக் காலத்தைக் கடத்தவே எதிர்பார்க்கின்றார். காலத்தை கடத்தி இழுத்தடித்து – எதிர்த் தரப்பை சலிக்கச் செய்து அந்த விடயத்தை நீர்த்துப்போகச் செய்வதில் ரணில் வல்லாதிவல்லன்.

இப்போதும் அத்தகைய யுக்தியையே ரணில் கையில் எடுத்திருப்பதாகவே தோன்றுகின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் காலத்தில் தமிழ் மக்களிடத்தில் வந்து, 'மறப்போம்; மன்னிப்போம்' என்றும் கூறியிருந்தார். ''கடந்த காலப் போர்க்காயங்களை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம்'' எனவும் குறிப்பிட்டவர். அதனைச் செயலுருப்படுத்தும் ஒரு வடிவமாகவே உண்மை நல்லிணக்கஆணைக்குழுவைஅவர்அமைக்கமுற்படுகின்றார். தென்னாபிரிக்காவில் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு மூலம் அங்கு சமாதானம் மலர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு அந்த நாட்டிலும் முழுமையாக வெற்றியடையவில்லை என்பதுதான் உண்மை. உலகளாவிய ரீதியில் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு தென்னாபிரிக்காவை முதன்மை உதாரணமாகக் கைக்கொண்டாலும் அதில் பெரும் தோல்வியும் இருக்கின்றது. இலங்கை அரசாங்கம் இப்போது உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதன் ஊடாக தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கை கதவை மூட நினைக்கின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இறுதிப்போரில் இடம்பெற்ற இனவழிப்புக்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இனியொரு தடவை இவ்வாறு நிகழாமல் இருக்க உறுதியான அரசியல் அதிகாரம் தேவை. ஆனால் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஊடாக இவையிரண்டும் நிலைநாட்டப்படாது.

சர்வதேசசமூகத்தின்கண்துடைப்புக்காக உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அரசாங்கம் நிறுவலாம். ஆனால் அதன் ஊடாக இந்த நாட்டில் நல்லிணக்கம் மலரும் என்று நினைத்தால் அதுபோன்ற மடைத்தனம் வேறில்லை.

## நாளொரு நல்வார்த்தை

"இழந்ததை நினைத்து வருந்தினால் இருப்பதையும் இழக்க நேரிடலாம். இருப்பதில் மகிழ்ச்சி கொண்டால் இழந்ததையும் அடைந்து விடலாம்"
–இந்தியப் பழமொழி




# மலையக மக்களின் வாழ்வில் ஒளியேற்றுக

## இ.தொ.க.பிரதிநிதிகள் ஜெய்சங்கரிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 21

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது.



இதன்போது இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், தற்போதைய சூழ்நிலையில் தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தேவையான புதிய திட்டங்களை இந்தியா அறிமுகப்படுத்தவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு சுட்டிக்காட்டினார்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ள 10 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை விரைவுபடுத்த மாற்றுப் பொறிமுறை ஒன்றை முன்னெடுக்கவேண்டும் என இ.தொ.காவின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இரண்டு கோரிக்கைகளையும் விரைவில் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்தார். (ச-இ)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு வடக்கில் 17,555 பரீட்சார்த்திகள்

நாடளாவிய ரீதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் வடமாகாணத்தில் 139 பரீட்சை நிலையங்களில் 17 ஆயிரத்து 555 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்தில் 15 ஆயிரத்து 156 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 2 ஆயிரத்து 399 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

அர்ப்பணிப்புடன் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் வெற்றி பெறுவீர்கள் என நம்புகிறேன்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்வரும் நாள்களில் நிதானமாகவும் தெளிவாகவும் நம்பிக்கையுடனும் பரீட்சையை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். பரீட்சை என்பது எவ்வளவு கற்றிருக்கிறோம் என்பது முக்கியமல்ல. உரிய நேரத்தில் வினாக்களை விளங்கிக்கொண்டு பதில் எழுதுவதிலே தங்கியுள்ளது. பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் நம்பிக்கையுடன் தோற்றி வெற்றிபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (ஒ-14,20)

## நாளை

22.01.2023
ஞாயிற்றுக்கிழமை
தை 08

சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த விடமாட்டோம்!

## நாடாளுமன்றத்தில் வீரசேகர கொக்கரிப்பு



கொழும்பு, ஜன. 21

வீடு தீப்பற்றி எரியும்போது புகைப்பிடிக்க முயற்சிப்பதை போன்று தமிழ்த் தலைமைகள் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டை பிளவுபடுத்தும் வகையில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள். எக்காரணிகளுக்காகவும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த விடமாட்டோம் – இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர.

நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக் குறையால் நாடு பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலைமை சற்று முன்னேற்றமடைந்த நிலையில் காணப்படுகிறது. இருப்பினும் ஒரு சிலர் தற்போது பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறார்கள்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் எமது அரசாங்கம் மக்களிடம் உண்மையை குறிப்பிடவில்லை. பொருளாதார பாதிப்பை ஒரு தரப்பினர் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி சட்டத்துக்கு முரணாக செயற்பட்டார்கள். சட்ட ஒழுங்கை நிலைநாட்டியதைத் தொடர்ந்து பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் தற்போது உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

வீடு தீப்பற்றி எரியும் போது அந்தத் தீயில் இருந்து புகைப்பிடிப்பதற்காக தீ எடுப்பதை போன்று தமிழ் அரசியல் கட்சிகள் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கிறார்கள்.

நாட்டை பிளவுபடுத்துமாறு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் ஜனாதிபதிக்கு கடும் அழுத்தத்தை வழங்குகின்றன.

இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வரலாற்று ரீதியில் பல்லாயிரக் கணக்கானோர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். ஒருமைப்பாட்டை முன்னிலைப்படுத்தி தான் 69 லட்ச மக்கள் 2019ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இவ்வாறான நிலை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தேவைகளுக்காக 13ஆவது திருத்தம் ஊடாக நாட்டை பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார். (ம)

## காலபோகத்துக்கு டீசல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 21

பெரும்போக நெற்செய்கையின் அறுவடைப் பயன்பாட்டுக்கு டீசல் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வடக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு டீசல் விநியோகம் இடம்பெறுகிறது.

கமநலசேவை நிலையங்களின் மேற்பார்வையில் விரைவில் நெற்செய்கையாளர்களுக்கு டீசல் விநியோகிக்கப்படவுள்ளது. (ச-17)

## பராமரிப்பற்ற மாடுகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை

சாவகச்சேரி, ஜன. 21

நாவற்குழிப் பகுதியில் ஏ-9 வீதிக்கு அண்மித்த பகுதிகளில் உள்ள மாடுகளைப் பாதுகாப்பாக கட்டி வளர்க்காவிடின் மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாவற்குழி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

நாவற்குழிச்சந்தி வீதி மற்றும் சுற்றுவட்டம் போன்ற இடங்களில் இரவு நேரத்தில் வளர்ப்பு மாடுகள் தஞ்சமடைவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகின்றது. அத்துடன் அநாவசியமான விபத்துக்களும் இடம்பெறும் சூழ்நிலை காணப்படுகின்றது

எனவே மாடு வளர்ப்போர் இரவில் பாதுகாப்பான இடத்தில் மாடுகளைப் பராமரிக்குமாறும் மாடுகளை அநாதரவாக விடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை நாவற்குழி பிரதேச வீதி ஓரங்கள் மற்றும் பொதுஇடங்களில் குப்பை கொட்டுவது கண்டறியப்பட்டுள்ளது. குப்பைகளை வீதி ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டவேண்டாம் எனவும் மீறி குப்பைகள் கொட்டுவோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர். (ஒ-14,159)

## பொதுச்சபை கூட்டம்

சாவகச்சேரி, ஜன.21

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்படவுள்ளதால் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.கிருஷ்ணவேணி கேட்டுக்கொண்டுள்ளார். (ய-9)




## 9 'ஏ' சித்திபெற்ற மூவருக்கு ஊக்குவிப்பு

சாவகச்சேரி, ஜன. 21

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9 'ஏ' பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களுக்கு சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தால் தலா 50 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டது. (ஒ-14,214)

## யோகா கற்கைநெறி புதிய பிரிவு விரைவில்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இந்தக் கற்கைநெறி இடம்பெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ள இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொள்ளலாம்.

3 மாதகாலத்தைக் கொண்ட இந்தக் கற்கைநெறியை பூர்த்தி செய்வோருக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

பயிலவிரும்புவோர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் 'கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-66)

## 'விடியலைத் தேடி' கனடா அமைப்பால் மாணவர்களுக்கு உதவித்திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

"விடியலைத் தேடி" கனடா அமைப்பால் விசேட தேவையுடையவரான கௌரிஷ் சுப்பிரமணியத்தின் 20ஆவது பிறந்த நாளை முன்னிட்டு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான உதவித் திட்டங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

விசேட தேவையுடைய மூன்று மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைக்காக தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் 25 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் ஒரு மாணவருக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் மதியழகன் சுபாஜினி மற்றும் வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் ஆகியோர் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கினர்.

அதனைத்தொடர்ந்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் அரங்குக்கு ஒளி அமைப்பு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபா கல்லூரி முதல்வர் திதிகரனிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் சுன்னாகம் வாழ்வகத்துக்கு 7 லட்சம் ரூபாவும், மட்டக்களப்பு சிறுவர் இல்லத்துக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கரந்தன் கருணாலயத்துக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியும் மற்றுமொரு குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (ஒ-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் - கொக்குவில் ஆகிய இடங்களுக்கு இடைப்பட்ட இடங்களில் சிறிய குடும்பத்திற்கு (4 பேர்) வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 077 515 2015

## தேவை

மென்பான விற்பனை பிரதிநிதி தேவை.

தொடர்பு : 077 3915630




யாழ்ப்பாணம் - ஏழாலை திவ்யா முன்பள்ளிச் சிறார்களின் மனநிலையை மகிழ்ச்சிப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாக பட்டம் ஏற்றும் நிகழ்வு மேற்படி முன்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள காணியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அனைத்து முன்பள்ளிச் சிறார்களும் இணைந்து விதம் விதமான பட்டங்களை ஏற்றி மகிழ்ந்ததுடன் தமது மகிழ்ச்சியையும் ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டனர். (ய-66)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ். ஜன. 21

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 27ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் சங்கத்தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இணுவில் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு கழகங்களில் இருந்தும் 2 பிரதி நிதிகளை மட்டும் கூட்டத்துக்கு அனுப்பி ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-14)


## மரண அறிவித்தல்



### சிவசம்பு வன்னியசேகரம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு வன்னியசேகரம் நேற்று (20.01.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகராணியின் (சந்திரா ரீச்சர்) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, விலங்கன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணிக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு
புன்னாலைக்கட்டுவன்.
077 129 8159

தகவல்:
த. நந்தகுமாரன்
(மைத்துனர்)

(CS 23044) (3/6)

## மரண அறிவித்தல்

மண்ணில் 01 . 05 . 1962



விண்ணில் 19 . 01 . 2023

### அன்ரன் சகாயமேரி (சறோ)

(ஓய்வு நிலை உத்தியோகத்தர், ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை, மண் குழி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் சகாயமேரி (ஓய்வு நிலை உத்தியோகத்தர், ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை) அவர்கள் நேற்றுமுன்தினம் (19.01.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருசலின் மற்றும் சந்தனமேரி தம்பதிகளின் பாசமிகு ஏக புதல்வியும், காலஞ்சென்ற வெள்ளைத்தம்பி நீற்றம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வெள்ளைத்தம்பி அன்ரன் (இளைப்பாறிய அஞ்சலர், உப தபாலகம், அல்லைப்பிட்டி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சூசைநாயகம் (ராசு), மனோகரன் (ரவி, ஓய்வுநிலை அலுவலர், பிரதேசசபை ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தரண், அச்வின், ஜெனிமரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், அல்போன்ஸ்சம்மா (தங்கம்), ஜெயமலர் (ஜெயா), அலெக்சாந்திரியா, டெய்சி, ஆன்சித்திரா, அஞ்சலா, டியூலா, அலோசியஸ், அமில்டன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

077 628 2679
(CS 23041) (3/6)

தகவல் :
கணவர்

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 14 . 03 . 1943



விண்ணில் 21 . 01 . 2013

### அமரர் வேலாயுதம் தர்மஞானசிங்கம்

பரந்தன் மண்ணின் மைந்தனாய்
காதலை அள்ளிக் கொடுத்த கணவனாய்
அப்பா என்ற அன்பின் உருவமாய்
பேரன்பு கொடுத்த பேரனாய்
மருமக்கள் மெச்சிடும் மாமனாய்
இவ்வுலகில் வாழ்ந்த உத்தமரே

அகத்தே எம்மைச் சுமந்து நின்றீர்
எமக்காய் உம்மை உருக்கிக் கொண்டீர்
எம் மனதினின்று மறையாத மனிதராய்
நேர்மையின் சிகரமாய் நிலைத்து நின்றீரே

உமைக் கட்டியணைத்து – உம்
மார்பில் கேட்கும் இதயத் துடிப்பின்
ஓசை கேட்டிடும் வரம் வேண்டி
காத்து நிற்கின்றோம்.



சிங்கத்தின் சொந்தங்களாய்
குடும்பத்தினர்.

## 11ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



### அமரர் நடராசா காசிவேந்தன்

(MA, B.Com, Dip.in pds, Dip. in mgt)

(முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம் – உடுவில்)

பிள்ளைகளின் கல்விக்கு அடியிதழ் பதித்து
விடைகள் அறியுமுன்னே இறைவன் அழைத்தானோ!
ஆண்டுகள் பதினொன்று ஓடி மறைந்தாலும் – இக்காலம்
பதினொரு யுகங்களாக மாறிவிட்ட வேளையில்
புலமைப்பரீட்சையில் சித்தி,
இடைநிலைக் கல்வியில் அதிதிறமைச் சித்திகள்
இத்தனைக்கும் நீங்கள் இல்லையே
விண்ணுலகம் சென்ற போது அடிக்கல் பதித்த
மகாசங்கத்திற்கும் இன்று வயது பதினொன்று
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்...

தோற்றம் 25.06.1967
மறைவு 22.01.2012

திதி:–
தை அமாவாசை
(21.01.2023)

கற்பக பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு.

மனைவி,
பிள்ளைகள்

ஓம் ஸ்ரீ சாய்ராம்

## சிறப்புச் சொற்பொழிவு

### ஆற்றுபவர் : ஸ்ரீ வேதநாராயண் கொல்லங்கோடே

(பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் அரவணைப்பில் 50 வருட காலம் வாழ்ந்து வரும் வேத அறிஞர், பிரசாந்தி நிலையம், புட்டபர்த்தி, இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்)





இடம் – ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபம், கோவில் வீதி நல்லூர்.

காலம் – 21.01.2023 சனிக்கிழமை

நேரம் – மாலை 04.00 மணி தொடக்கம் 06 மணி வரை

தலைப்பு – மனித சமுதாயகத்திற்கு வேதத்தின் முக்கியத்துவம், வேதத்தினை கற்பித்தலின் முக்கியத்துவம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடன் எனது அனுபவம்.

இந்த அரிதான ஆனந்த மயமான நிகழ்வுக்கு உங்களை மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.


ஜெய் சாய்ராம்!

Sri Sathya Overseas Organisation Srilanka (Affiliated with Sri Sathya Sai Global Council Prasanthi Nilayam, Puttaparthi, India.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபரின்

# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




## அதிபர் உயர்திரு. அவுலின் மரியதாசன்

## (Bed, Dip. in Sm, SLPS - 1)

## 21.01.2023

**சேவை விபவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | மன்/ முருங்கன் ம.வி | - ஆசிரியர் | - 06.08.1988 | - 31.12.1989 |
| 2) | ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் | - ஆசிரியர் | - 01.01.1990 | - 31.12.1991 |
| 3) | மன்/ முருங்கன் ம.வி | | - 01.01.1992 | - 28.09.1994 |
| 4) | மன் / இசைமாலைத் தாழ்வு RCTMS | | - 29.09.1994 | - 09.01.2001 |
| 5) | மன் / செட்டியா கட்டை அடம்பன் GTMS | - பதில் அதிபர் | - 10.01.2001 | - 10.04.2002 |
| 6) | மன்/ செட்டியாகட்டை அடம்பன் GTMS | - அதிபர் | - 11.04.2002 | - 02.05.2004 |
| 7) | மன் / சிறுக்கண்டல் RCTMS | - அதிபர் | - 03.05.2004 | - 02.01.2008 |
| 8) | யா/ திருநெல்வேலி HTMS | - அதிபர் | - 03.01.2008 | - 12.03.2009 |
| 9) | யா/ சென்.றோக்ஸ் RCTMS | - அதிபர் | - 13.03.2009 | - 01.07.2015 |
| 10) | யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | - அதிபர் | - 02.07.2015 | - 22.01.2023 |

### யாழ். மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி



அதிபர் திரு.அவுலின் மரியதாசன் தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெற்று இன்று மணிவிழாக்காணும் இவ்வேளையில் அவரை ஆசிர்வதித்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். கல்விச் சேவையில் தன்னை இணைத்துத் தனது மகத்துவத்தாலும், தன்னலம் கருதாத சேவையுணர்வும், தொழில் வாண்மைத்துவத்தின் உயர்வினாலும் பதில் அதிபர், அதிபர் எனத் தன்னைத் தகுதியுடையவர் ஆக்கி இவர் வழங்கிய சேவை பாராட்டுக்குரியதாகும். இவரில் காணும் கடின உழைப்பு, விடாமுயற்சி, இறை நம்பிக்கை, தெய்வபயம் ஆகிய குணங்களை உளமார மெச்சுகின்றேன். இவர் தொடர்ந்தும் சமய, சமூகப் பணிகளை சிறப்புடன் ஆற்றவும் என்றும் மகிழ்வாகவும், வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ ஆசித்து இறையாசிகளை வழங்கி இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

**பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**ஆயர் - யாழ்.மறை மாவட்டம்.**

### குருமுதல்வரின் ஆசிச் செய்தி



ஆழமான இறை விசுவாசமும் அமைதியான பண்பும் நிர்வாகத் திறனும் கொண்டவர். கல்வித்துறைக்கும் திரு அவைக்கும் இவர் ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுகின்றோம். ஆயரினதும் குருக்கள் துறவிகளினதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

தன்னோடு பணியாற்றும் ஆசிரியர்களோடு மதிப்பும் மரியாதையும் கொண்டவர். மாணவர்களைத் தனது பிள்ளைகள் போல எண்ணி வழிநடத்துபவர். ஓய்வுபெறும் அதிபர் நல் ஆரோக்கியத்தோடும் அமைதியோடும் எல்லா வளங்களோடும் இறையாசீர் பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துவதோடு இவரது குடும்பத்தையும் இறைவன் ஆசிர்வதிப்பாராக.

**அருட்பணி ப. ஜோ. ஜெயரட்ணம்**
**குரு முதல்வர், யாழ். மறை மாவட்டம்.**

### என் நினைவில் நிறைந்தவர்




யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றி அறுபதாவது அகவையில் மணிவிழாக்காணும் திரு. அவுலின் மரியதாசன் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எல்லோரையும் மதித்து அனைவருடனும் பண்பாக இதமாகப் பேசி கடும் சொற்பிரயோகங்கள் இல்லாமல் தனக்கே உரித்தான தனித்துவத்துடன் பாடசாலையை நிர்வகித்து தன் பணியிலே வெற்றிகண்டு அவ்வெற்றிகளையும் அமைதியாக ஏற்றுத் தன் ஆளுமைக்கும், ஆசிரியத்துவத்துக்கும் சிறப்புச் சேர்த்துள்ளார். தனது பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஆழ்ந்த புரிதலுடனும், அன்புடனும் வழிநடத்தி வந்தவர். தனது பணியிலே அதிக ஆர்வமும், விவேகமும் கொண்டு உழைத்து இன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் இவர் இறையாசிபெற்று குடும்பத்துடன் சந்தோஷமாகவும் நலமாகவும் வாழ இறையாசிர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அருட்பணி அ.யாவிஸ்**
**பங்குத் தந்தை, யாகப்பர் ஆலயம்.**

### முன்னுதாரணமானவர்



ஓர் அமைதியான அடக்கமான ஆடம்பரமற்ற எளிமையான நன் மாணாக்கரை உருவாக்குகின்ற சேவை நலன்மிக்க நல், மனிதனுக்கு ஓர் அதிபருக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். சக ஆசிரியப் பணியாளர்களால் விரும்பப்படுகின்ற, அன்பு செய்யப்படுகின்ற சக தோழனாக இவர் விளங்குவது தலைமைத்துவப் பணியில் இருப்பவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஆசிரியப் பணிக்கு, அதிபர் பதவிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டாலும் தொடர்ந்து அவர் உடல் உள நலத்தோடு இருந்து தன்னாலான சமூகப் பணிகளையும் பொறுப்புக்களையும் கடமைகளையும் ஆற்றுவதற்கான ஆற்றலை இறைவன் இவருக்கு அருள வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை இவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அருட்பணி செ. அன்புராசா அ.ம.தி**
**87, அன்னை இல்லம், கிளிநொச்சி.**

### வட மாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் திரு. அவுலின் மரியதாசன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் கல்விச் சமூகத்திற்கு திருப்திகரமான சேவையை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக் காலத்தில் சமூகம் சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினை பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூகப்பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. யோண் குயின்ரஸ்**
**மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.**

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி




யா/ சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் அதிபராக 08 ஆண்டு காலம் பணிசெய்து 34 வருட சேவையினைப் பூர்த்திசெய்து மணிவிழாக் காணும் திரு. அவுலின் மரியதாசன் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவரது சீரிய சிந்தனையும், செயல்திறனும், நல் மனப்பாங்கும், நல் நட்பும் உவகை தந்தவை. ஆசிரியர் தொழிலில் தொடங்கி தொடர் கல்வியில் நாட்டம் செலுத்தி அதிபர் ஆனவர்களில் இவரும் ஒருவர். சிறந்த கல்வியியலாளனாகப் பரிணமித்து மாணவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் மண்ணுக்கும் பெருமை சேர்த்தவர். 1988 ஆம் ஆண்டு தொடங்கிய ஆசிரியப்பணி மன்னார், யாழ்ப்பாணம் என இன்றுவரை சேவையாற்றி சேவைநலன் பாராட்டைப் பெறுகின்றார். மணிவிழா நாயகன் அகவை 60 ஐ நல்ல ஆளுமையாகக்கொண்டு இன்னும் காத்திருக்கும் ஏராளம் பணிக்காக உவந்து செயலாற்ற எனது வாழ்த்துக்கள் அனேகம். வாழ்க வளமுடன் நலமுடன் பல்லாண்டு.

**திரு. முத்து இராதாகிருஷ்ணன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

### அனைவரையும் ஆற்றுப்படுத்தும் சிறந்த வழிநடத்துனர்



மன்னர் மைந்தன் திரு. அவுலின் மரியதாசன் அவர்களின் 34 வருட கல்விச் சேவையினைப் பாராட்டி இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் ஆசிரியராகவும் அதிபராகவும் கல்விப் புலத்திற்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியது. உண்மை, பணிவு, மன உறுதி, அன்பு, ஒழுக்கம், தெளிவு, மற்றவர்களை மதித்து நடக்கும் பண்பு என்பவற்றை தன்னகத்தே கொண்டவர். இவருடைய காலப்பகுதியில் எமது பாடசாலையில் தேசிய பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளில் மாணவர்கள் இணைந்து செயற்படவும் மாணவர்கள் சிறந்த துலங்கல்களையும் ஆற்றல்களையும் பெறவும் வழி சமைத்தவர். முகாமைத்துவம் சார்ந்து அவர் ஆற்றும் பங்களிப்பு மிகவும்
காத்திரமானது. பிரதி அதிபராக நான் பதவியேற்ற காலத்தில் இருந்து நிர்வாகத்துறை சார்ந்து எம்மை சிறந்த முறையில் ஆற்றுப்படுத்தும் ஒரு வழிநடத்துனராக செயற்பட்டவர்.

**திருமதி ருஷானாவர்ஜிலியா பாலமுரளி**
**பிரதி அதிபர்.**

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் அதிபர் அவர்கள் தனது ஆற்றல் மிக்க சேவையை கல்வித்துறைக்கு வழங்கி நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது சேவையைப் பாராட்டி எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பெண்களுக்கான இப்பாடசாலையை தனது ஆளுமையினாலும் ஆற்றல் மிக்க சேவையினாலும் வழிநடத்திச் சென்றவர். இவரிடம் இருக்கும் பொறுமையும் பொறுப்புணர்வும் ஆசிரியர்களை ஒன்றிணைத்து ஒத்துழைப்புப் பெறும் சாந்த குணமும் பாடசாலையின் முன்னேற்றத்துக்கு வழிசமைத்தது எனலாம். இத்தகைய அதிபர் ஓய்வுக் காலத்தில் சகல நலன்களுடன் வாழ வேண்டும். சமூகத்துக்குச் சேவைசெய்ய வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.ஆ.யோகலிங்கம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர், யாழ். கோட்டம்.**

### தன்னலம் கருதா சேவையாளன்



வடமாகாணத்தில் சிறந்த கல்வி வலயங்களில் ஒன்றான மன்னார் கல்வி வலயத்தின் படிமுறை வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு இருந்துள்ளமை மறுக்க முடியாத உண்மை யாகும். இவரது மாணவப் பராயம் மகிழ்ச்சிகரமானது. இவர் ஒரு குறுந்தூர ஓட்டவீரர். பன்முகப் பார்வை கொண்ட இவர் ஒழுக்கம், ஆன்மீகப் பற்றும் கொண்ட சிறந்த அதிபர். ஓய்வுபெறுவது என்பது காலத்தின் தேவை. இவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சியாக அமைய இறையாசீர் கூறி மணிவிழா நாயகனை வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.தி. ஜெகநாதன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**நானாட்டான் கோட்டம், மன்னார்.**

### கருணை உள்ளம் கொண்ட பண்பாளன்



ஒரு சிறந்த விசுவாசியாக எமது அதிபர் தன்னலமற்ற சேவை, கடமையுணர்வு, கருணையுள்ளம் அனை வருடைய
ஒரு சிறந்த விசுவாசியாக எமது அதிபர் தன்னல மற்ற சேவை, கடமையுணர்வு, கருணையுள்ளம் அனைவருடைய கருத்துக்களையும் செவிமடுப்பது போன்ற நல்ல இயல்புகள் இவர் ஒரு சிறந்த அதிபர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் சிறந்த முறையில் வழி நடத்தி பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள் சிறந்த அடைவுகளைப் பெற வழி அமைத்துக் கொடுத்தவரை இதுவரை திருப்திகரமான சேவை வழங்கி அகவை அறுபதில் ஓய்வுபெற்ற அதிபரை உடல், உள, ஆன்மீக நலத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி ஞா.ஜெகதீஸ்வரன்**
**தலைவர்,**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.**

### அன்புமொழி பகரும் பண்பாளரைப் போற்றுவோம்

யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதினைக் கண்டு மகிழும் திரு.அவுலின் மரியதாஸன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அன்புமொழி பகரும் பண்பாளனை, மாணவர்கள் மனங்களைக் கவர்ந்திட்ட காருண்யனை, சமூகத்தால் நேசிக்கப்பட்ட சமூகத் தொடர்பாளனை, பிரியாவிடை பெற்றுச் செல்லும் இவ்வேளையில் அவர் சேவை நலனைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம். அன்பு வழிகாட்டும் மணிவிழா நாயகன் நிறை செல்வம், நீடு ஆயுள் பெற்று வாழ மணிவிழாச் சபையின் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**மணிவிழாச் சபை.**

### நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட அதிபர்



பாடசாலைக் கருமங்களை நேர்த்தியுடனும் நேர்மையுடனும் செய்கின்ற ஒரு சிறந்த அதிபருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அமைதியான தோற்றம், அன்பான பேச்சு, நேர்மையான நடத்தை, இரக்கம் நிறைந்த உள்ளம், மன்னிக்கும் மனப்பாங்கு இத்தனை பண்புகளையும் தன்னகத்தே கொண்ட அதிபரை எம்பாடசாலை பெற்றது பெரும் பாக்கியமே. நான் சமூகப் பிரதிநிதியாக நின்று அவரிடம் மாணவர் தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்கும்போது எங்கள் சமூகத்திற்கு மதிப்பளித்து கோரிக்கைகளை நிறைவேற்றத் தயங்காதவர். இத்தகைய அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் மனமகிழ்வுடனும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்து இறைபணியுடன் சமூகப் பணிகளும் தொடர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி யூலியஸ் யூஜின்**
**பழைய மாணவர் சங்கம், யா. சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.**

**அனுசரணை**

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**பழைய மாணவர் சங்கம்.**

Congratulations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கந்தன் திருமண சேவை

### மணமகள்கள் தேவை

01. ஆண் (V) 23.05.1992 அவிட்டம் 1ஆம் பாதம் BSc செவ் 7இல் கி.பா 41 3/4. வேலை:-A.G Office ல் பணிபுரியும் மணமகனுக்கு அரச உத்தியோகமுள்ள மணமகள் தேவை.
02. ஆண் (V) 1991 ல் பிறந்த மிருகசீரிடம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற 29 கிரகபாவம் உடைய ஆசிரியர் மணமகனுக்கு அரச உத்தியோகமுடைய மணமகள் தேவை.
03. ஆண் (V) 3.12.1993 புனர்பூசம் 4ம் பாதம் BANK ல் பணிபுரியும் சூரிய, செவ் 12 ல் கிரகபாவம் 27 மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.
04. ஆண் (V) 14.08.1985 ல் பிறந்த புனர்பூசம் நட்சத்திரம் சூரிய செவ்வாய் 10ல் கி.பா 41 பிரதேச சபையில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

### மணமகன்கள் தேவை

01. பெண் (V) 21.11.1993 சதயம் சூரிய,செவ் 8ஆம்வீட்டில் BA, MA and Sworn Translater கி.பா 58 அரச உத்தியோக மணமகன் தேவை.
02. பெண் (V) 1997 ல் பிறந்த பூரட்டாதி செவ் இல்லை. கி.பா 47 பட்டதாரி மணமகளுக்கு உத்தியோக மணமகன் தேவை.


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திருமதி உதயமலர் சிவகுமாரன்**

அவர்களின் அன்புத் தந்தை


**நவரட்ணம் நமசிவாயம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(CS 22763)1-6

## 5ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
**பசுபதி பாலரஞ்சன்**

தோற்றம்
14.12.1965

மறைவு
15.01.2018

திதி: திரியோதசி
20.01.2023

ரஞ்சனமான ரத்தினமே! ரத்த பந்தம் விட்டு எங்கு சென்றீரோ ரம்மியமான பேச்சால் பிரமிக்க வைப்பவரே - உம் ரம்மியமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம் ஐந்தாண்டானதையா நேரில் உமைக்கண்டு

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

**குடும்பத்தினர்.**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மல்லிகா தேவி (மல்லி) மகேந்திரராஜா**

தோற்றம்
24.11.1927

மறைவு
04.02.2019

திதி: அமாவாசை 21.01.2023

அன்பின் அம்மா ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா
- என்று அழைப்பதற்கு
நீங்கள் இல்லையே.
ஆண்டுகள் பல கடந்தாலும்
- நினைவுகள் நீங்காது

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

மேதேஸ் லேன், மானிப்பாய்.


## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1) **எழுதுவினைஞர் (Clerk)**
2) **கணக்கு எழுதுநர் (Accounts Clerk)**

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (23.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரவும்.

**உதயன் பணிமனை**

இல.361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

**காசிப்பிள்ளை சதாசிவம் (சிவதொண்டர்)**

முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர், கோயில் வீதி.
அத்தியடி இல: 127/10, யாழ்ப்பாணம்.



**பிறப்பு: 03.03.1930 இறப்பு : 18.01.2023**

ஆன்மீக சிந்தனைவாதி அரசியல் மூத்த அறிவாளி 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது யோகபுரம் பகுதியில் குடியேறி வாழ்ந்த காலத்தில் எமது ஆலய வளர்ச்சிக்காகவும் துன்பப்பட்ட மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை ஆன்மீகத்தின் பெயரால் வழங்கியதுடன், அவர் பல அறிவு சார்ந்த விடயங்களை யாவருக்கும் கூறி வந்த ஒரு பெரும் உத்தமன். இவர் தனது 93 ஆவது வயதில் சிவபதம் எய்தியுள்ளார். இவர் போன்ற ஆன்மீக சிந்தனையாளர்களை இனி காண்பது என்பது அரிது. இவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என எல்லாம் வல்ல அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதரை வேண்டிக்கொள்வதுடன் இவரின் துயரில் இருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினை பரிபாலன சபை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய பரிபாலன சபை, அனிஞ்சியங்குளம், மல்லாவி, யோகபுரம்.**
**021 2285 600**

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 07 . 1978



மறைவு
20 . 01 . 2023

**செல்வன் குணசேகரம் குணதாசன் (ஆச்சாரியார்)**

யாழ்.வண்ணார்பண்ணை பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் குணசேகரம் குணதாசன் அவர்கள் நேற்று (20.01.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணசேகரம் தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், குணேஸ்வரி (பிரான்ஸ்), குணதீபன், யசிந்தன் (லண்டன்), மணிவண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரதீப் (பிரான்ஸ்), சாயந்தி பிரியா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜனார்த்தன் (பிரான்ஸ்), அர்ச்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆகிசன், சுகிலயா, சரண்யா, அஷ்விகா, மதுவர்ஷா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**874/3, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(திவ்யமகாலுக்கு அருகாமையில்)**

**தகவல்: குடும்பத்தினர்.**
**074 0616 147**
**077 127 5380**

(CS 23033)1-6

## கரப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் நோக்குடன் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியெய்திய மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 24 பரீட்சார்த்திகளுக்கு செயல்முறை பயிற்சிப்பட்டறையை இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் நடத்த தீர்மானித்துள்ளது.

இதன்போது இவர்களுக்கு தேசிய தர சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சபைத் தலைவர் ரி.கருணாகரன், தேசிய மத்தியஸ்தர் சபைச் செயலாளர் எஸ்.காந்தரூபன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர், சர்வதேச கரப்பந்தாட்ட மத்தியஸ்த ஆலோசகர் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-14)

## மருத்துவ முகாம்

யாழ். ஜன. 21

இணுவில் அறிவாலய மண்டபத்தில் இன்று காலை 8 மணிமுதல் 12 மணிவரை சுகவாழ்வு மருத்துவ முகாமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜே183, ஜே188, ஜே189, ஜே191, ஜே192, ஜே193, ஜே194 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் இந்த மருத்துவ முகாமில் தம்மை தொற்றாநோய்கள் தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள முடியும். இதுவரை நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற கிளினிக்குகளுக்கு சமூகம் தராதவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## 13க்கு...

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை அவர் நேற்றுச் சந்தித்தபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. தமிழ் மக்களின் தேசத்தை அங்கீகரித்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கூறியுள்ளேன். அதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. அதனையே நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். தற்போது மேசையில் 13ஆவது திருத்தமே இருக்கின்றது. அதனையே நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் எப்படி நீங்கள் அதற்கு அப்பால் கோருவதை நடைமுறைப்படுத்தும்? முதலில் இருப்பதைப் பெற்றுக்கொண்டு அதற்கு மேல் பெறுவதற்கு முயற்சியுங்கள். அரசமைப்பில் உள்ளதை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாதபோது அதனைச் சுட்டிக்காட்டுவதை ஏனைய நாடுகளும் செவிமடுத்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும். இல்லாத ஒன்றை நடைமுறைப்படுத்தக் கோரும்போது அழுத்தம் கொடுப்பதில் சிக்கல்கள் இருக்கும்' - என்று ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது 'சிங்கள மக்களிடத்தில் தற்போது அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியால் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கவேண்டும் என்ற எண்ணம் உருவாகியுள்ளது' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டபோது, அதனைச் சுமந்திரனும் ஆதரித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த ஜெய்சங்கர் 'அப்படியானால்சிங்களமக்களிடத்தில்சென்று உங்கள் தீர்வை முன்வைத்து பரப்புரை மேற்கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த இன்னும் இரண்டு ஆண்டுகள் செல்லும் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் கூறியுள்ளார். அவர் அதனை நடைமுறைப்படுத்த மாட்டார். அதற்காகவே 2 ஆண்டுகள் தேவை என்று கூறுகின்றார்' என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே இதிலிருந்து மீள்வதற்கு நாட்டில் நல்லிணக்கம் - அரசியல் உறுதிப்பாடு அவசியம் என்று குறிப்பிட்ட ஜெய்சங்கர், பொருளாதார மீட்சிக்கான பங்களிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் வினவியுள்ளார்.

இதன்போது புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், புலம்பெயர் தமிழர்கள் முதலிடத் தயாராக இருந்தாலும் அவர்களுக்கு நம்பிக்கையீனம் இருக்கின்றது. இந்த அரசாங்கம் தீர்வை வழங்கவில்லை. அப்படியான நிலையில் அவர்கள் முதலிடத் தயங்குகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தியாவில் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கு அதிகாரங்கள் உள்ளன. ஆனால் இங்குள்ள மாகாணங்களுக்கு அவ்வாறு அதிகாரம் இல்லை. அது இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார். மேலும், பலாலி விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் தரையிறங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. எமது புலம்பெயர் தமிழர்கள் அங்கு வந்திறங்கும் வகையில் மேம்படுத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த ஜெய்சங்கர், பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியுள்ளேன். விரைவில் அபிவிருத்தி நடக்கும் - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கில் கடலட்டைப் பண்ணைகளின் அதிகரிப்புத் தொடர்பிலும் கூறப்பட்டது. அந்தக் கடலட்டைப் பண்ணைகளுக்கு அட்டைக் குஞ்சுகளை சீன நிறுவனமே வழங்குகின்றது. ஒரேயொரு நிறுவனம் அதனைச் செய்கின்றது. அவர்கள் எம்மவர்களுக்கு அந்தத் தொழில்முறைமையை கற்றுத்தரமாட்டார்கள். இவ்வாறானவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரம் எதுவும் எங்களுக்கு இல்லை என்பதையும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். (அ-ஓ-5)

## மீண்டும்...

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் தெரிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாநகரசபையின் 45 உறுப்பினர்களில் 24 உறுப்பினர்கள் இதன்போது சபையில் பிரசன்னமாகி இருந்தனர். 24 பேர் சபையில் இருப்பதால் கோரம் உள்ளமையால் மேயர் தெரிவை உள்ளூராட்சி ஆணையாளர் தொடங்கினார். இதற்கு அமைவாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இ.ஆர்னோல்ட்டின் பெயரை உறுப்பினர் பி.இ. கிறேசியன் முன்மொழிய உறுப்பினர் என்.எம்.பாலச்சந்திரன் வழிமொழிந்தபோது வேறு பெயர்கள் சபையில் முன்மொழியப்படவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் மு.ரெமிடியஸுடன் சேர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்களுமாக 4 பேர், இந்தத் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறுவதாகக்கூறி சபையிலிருந்து வெளியேறினர். இதையடுத்து முதல்வரைத் தெரிவுசெய்வதற்குப் போதிய கோரம் இல்லையென்று உள்ளூராட்சி ஆணையாளர் சபையை ஒத்திவைத்தார்.

இதற்கு ஆர்னோல்ட் அணியினர் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தனர். முதல்வர் தெரிவுக்காகபெயர்பிரேரிக்கப்பட்டபோது சபையில் போதிய கோரம் இருந்தது. அதன் பின்னர் வெளிநடப்புச் செய்ததைக் காரணமாகக் குறிப்பிட்டு தெரிவை ஒத்திவைக்க முடியாது என்பது ஆர்னோல்ட் தரப்பின் வாதமாக இருந்தது. எனவே ஆர்னோல்டை முதல்வராக அறிவிக்கவேண்டும் என்றும் இல்லாவிடில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆர்னோல்ட் தரப்பு கடிதம் அனுப்பியது. இது தொடர்பில் ஆளுநரும் தலையீடு செய்தார் என்று அறியமுடிகின்றது. இவ்வாறாக அழுத்தங்கள் வழங்கப்பட்ட பின்னணியிலேயே ஆர்னோல்டை முதல்வராக அறிவித்து இன்று வர்த்தமானி வெளிவரவுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம)

## தேர்தல்...

நிலைமையில் பாரதூரமான பாதகமான தாக்கத்தைச் செலுத்தும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலவரம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திறைசேரியின் செயலாளரால் அண்மையில் உச்ச நீதிமன்றத்துக்கு நாட்டின் உண்மையான நிதி நிலவரம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அரசாங்கத்தின் மாதாந்த வருமானம் 162 பில்லியன் ரூபாவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனைத்து செலவுகளின் பின்னர் 18 பில்லியன் மாத்திரமே எஞ்சும் தொகையாகக் காணப்படும்.

கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சிறு அபிவிருத்தி திட்டங்களுக்காக 100 பில்லியன் செலுத்தப்படவேண்டியுள்ளது. இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வாண்டு நிதி முகாமைத்துவம் கட்டுப்பாட்டை இழக்கும் நிலைமையே அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான நிலைமையில் தேர்தல் செலவுகளையும் ஏற்க வேண்டியேற்பட்டால் அது அரச நிதி நிலைமையில் பாரதூரமான பாதகமான தாக்கத்தை செலுத்தும். எனவே தேர்தல் செலவுகளை ஏற்பது திறைசேரிக்கு பெரும் சவாலாகும். கடந்த ஆண்டு அரச வருமானம் ஆயிரத்து 958 பில்லியன் ரூபாவாகும். எனினும் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி 3 ஆயிரத்து 58 பில்லியனாகும். அதாவது நூற்றுக்கு 256 வீதம் வருமானத்தைவிட செலவு அதிகமாகவுள்ளது.

இந்த மாதம் 18ஆம் திகதிவரை கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் 72 பில்லியனாகும். எனினும் வருமானத்துக்கும் செலவுகளுக்கும் இடையிலான இடைவெளி 310 பில்லியனாகும். அதாவது நூற்றுக்கு 530 சதவீதம் அதிகமாகும். இது இம்மாத இறுதியில் 480 பில்லியனாக அதிகரிக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தான் இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் தேர்தல் செலவுகளையும் ஏற்பது பெரும் நெருக்கடியாகும் என்று நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தேர்தலை நடத்துமாறோ அல்லது நடத்தவேண்டாம் என்றோ தெரிவிப்பதற்கான அதிகாரம் நிதி அமைச்சுக்கு இல்லை. நாட்டின் உண்மையான நிதி நிலைமையை நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். எனவே தேர்தல் குறித்து அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களே தீர்மானங்களை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ம)

## உள்ளூராட்சித்...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைகின்றது. வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததும் தேர்தல் திகதி தெரிவத்தாட்சி அலுவலர்களால் அறிவிக்கப்படவுள்ளன.

மார்ச் 4ஆம் திகதி சனிக்கிழமையே உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. ஆனாலும், தேர்தல் தொடர்பான பணிகளில் சில இடர்பாடுகள் இருப்பதாலும் குறிப்பாக அச்சிடும் பணிகளில் தாமதம் நிலவுவதால் மார்ச் 9 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தலை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்ற கோரிக்கையும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இன்றைய தினம் தேர்தலுக்கான திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இன்றைய தினமே முக்கியமான கட்சிகள் அனைத்தும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## 13ஆம்...

கார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரிடம் கையளித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 'உதயன் பத்திரிகைக்கு' தெரிவித்ததாவது,

13ஆம் திருத்தச் சட்டத்தை இலங்கையின் ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. இப்போது நடைமுறையிலுள்ளதே அதன் இறுதியான - முழுமையான வடிவம். இதற்கு மேல் எதையும் நடைமுறைப்படுத்த முடியாது. 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற பெயரில் 35 ஆண்டுகளாகக் கூறி வந்தாலும் எதுவும் நடக்கவில்லை. காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் உயர் நீதிமன்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் 32 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பான தீர்ப்புக்களில், ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர முடியாது என்பதையும் அதன் அதிகாரங்கள் கொழும்பு அரசிடமே இருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் அதனையும் மீறி எப்படி அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முடியும்?

நாம் இதன் காரணமாகத்தான் எமது தேசத்தை அங்கீகரிக்கவேண்டும் எனவும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் வலியுறுத்துகின்றோம் என்பதை ஜெய்சங்கருக்கு தெளிவாக எடுத்துரைத்ததுடன், அது தொடர்பான கடிதத்தையும் கையளித்தேன் - என்றார். (அ-ஓ-5)

## இலங்கைக்கு...

காக எந்தவொரு ஆதரவையும் வழங்க தயாராக உள்ளது என்று இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்தார்.

இலங்கைக்கு இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நேற்று ஜனாதிபதி ரணிலைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இந்த உத்தரவாதத்தை ஜெய்சங்கர் வழங்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புத் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தமையையிட்டு மகிழ்வடைகின்றேன். அயலுறவுக்கு முதலிடம் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் இலங்கைக்கான எனது பயணம் அமைந்தது. நம்பகமான ஓர் அயல்நாடாகவும் பங்காளியாகவும் உள்ள இந்தியா, தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கைக்காக எந்தவொரு ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளது. தேவையான இந்த நேரத்தில் நாம் இலங்கையுடன் துணைநிற்பதன் மூலம், இலங்கை எதிர்கொள்ளும் சகல சவால்களையும் வெற்றிகொள்ளமுடியுமென நம்புகின்றோம்' - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

## முட்டை....

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவரால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் நேற்று வேட்புமனுத் தாக்கல்




கிளிநொச்சி, ஜன. 21

கிளிநொச்சி, பூநகரி பிரதேசசபைக் கானவேட்புமனுவை இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி நேற்று வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தற்போது ஒவ்வொரு கட்சிகளாலும் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் பூநகரி பிரதேசசபையின் வேட்புமனுவை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கிளிநொச்சி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் நேற்று கையளித்துள்ளார்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைகளுக்கான வேட்பு மனுக்களை இலங்கைத்தமிழரசுக்கட்சிகடந்த புதன்கிழமை தாக்கல் செய்தது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இரண்டு சபைகளுக்கானவேட்புமனுக்களையே நேற்று மதியம் வரை தாக்கல் செய்துள்ளது. பருத்தித்துறை நகரசபை மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகிய இரண்டு சபைகளுக்கே சட்டத்தரணி ந. காண்டீபன், தீபன் திலீசன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தனர். (ச-113-20)

## கோரவிபத்தில்...

நுவரெலியா மாவட்டம், நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியின் சமர் செட் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பேருந்தில் பயணித்த 42 பேரும் வாகனத்தில் பயணித்த 5 பேரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த வாகனம் சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது என்றும், அங்கு இருள் காரணமாக மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது என்றும் நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(அ-ம-22)

## அரசாங்கம்...

இல்லை. இனியும் தாமதிக்காது, தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரிடம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் எடுத்துரைத்தார்.

'தீர்வுத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களில் உத்தரவாதம் வழங்கப்பட்டாலும், அவை நிறைவேற்றப்படுவதில்லை. எனவே, விரைவில் தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்' என்று குறிப்பிட்டார். (அ-ஒ-22)

## 'சுமந்திரன்...

சார்பில் உத்தியோகபூர்வமாக வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனின் தீவிர ஆதரவாளர்களால் சுயேச்சையாகப் போட்டியிடுவதற்கு நேற்று வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயர் குறித்த முகவராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று சபைகளுக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்து வேட்புமனுவும் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தன்னிச்சையாக தெரிவுகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்தே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஆதரவாளர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்துபவர்கள் சுயேச்சைக் குழுவாக 3 சபைகளிலும் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (அ-ஒ-5)

## தமிழ்த்...

சென்றதை 'நல்ல விடயம்' என்று குறிப்பிட்டு ஜெய்சங்கர் வரவேற்றுள்ளார்.

இலங்கைக்கு இரு நாள் பயணமாக வந்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்றுக் காலை சுமார் அரை மணி நேரம் கலந்துரையாடல் நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இந்தியன் இல்லத்தில் ஒன்றாகச் சந்தித்தார். சுமார் அரை மணிநேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பின் ஆரம்பத்தில், 'நீங்கள் எல்லோருமாக ஒன்றாக வந்துள்ளது நல்ல விடயம்' என்று அவர் குறிப்பிட்டார். இந்தச்சந்திப்பில்தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள் 4 அணிகளாகியுள்ள சூழலிலேயே, அவர்கள் அனைவரையும் ஒரே மேசையில் இருத்தி சந்தித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர். (அ-ஒ-5)

# குளத்தில் மூழ்கி சிறுவன் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 21

கோப்பாய் - கரவெட்டிக்குளத்தில் மூழ்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். வயாவிளானைச் சேர்ந்த ஜெயசீலன் சியான் (வயது - 12) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான்.

குறித்த சிறுவன் பொங்கலைக் கொண்டாடுவதற்காக கோப்பாயிலுள்ள தனது அப்பம்மா வீட்டுக்குச் சென்று அங்கே தங்கிநின்றுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தனது நண்பர்களுடன் கோப்பாய் கரவெட்டிக் குளத்தைப் பார்ப்பதற்காகச் சென்ற இடத்திலேயே குளத்தில் மூழ்கியுள்ளார். ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாலை 4 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். கோப்பாய் பொலிஸாரும் சாட்சியங்களைப் பதிவுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-26)

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் இரண்டே முக்கால் பரப்பு (2 3/4 பரப்பு) காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

**தரகர் தேவை இல்லை**

(CS/ 48701)

**தொ.இல:- 077 654 2751, 0777 036 914, 077 126 3698**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில்**
**24 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**


- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
  நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
  ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- **பார்வையிடும் நேரம்:-** காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம் 077 8147 389**
**077 9865 457**

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை சதாசிவம்

**தோற்றம்: 03.03.1930** **மறைவு:- 18.01.2023**



இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை சதாசிவம் கடந்த (18.01.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், காலஞ்சென்ற ஜெயலஷ்சுமி, லோகேஸ்வரன், காலஞ்சென்ற தமிழரசுவரன், சத்தியவாகிஸ்வரன், மங்களேஸ்வரன், திருக்கேதீஸ்வரன், திலகலக்சுமி, காலஞ்சென்ற நவலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்ரா, சரஸ்வதி, லக்கினேஸ்வரி, நந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயலக்சுமி, அர்ச்சுனா, கஸ்தூரி, சுதந்தன், பிரியந்தன், மயூரன், அர்ச்சனா மயூரன், கீர்த்தனா, ஹரிஷ், விஸ்னா, கார்த்திகன், கபிலன், அபிராமினி, மதுரன் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை இல.127/10, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 48699)4-6)

**076 692 6558**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
வித்தியாலய பிரதி அதிபர் சி.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராஜதுரை, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சைந்தவி ஜனார்த்தனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-14,9)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 5 ஆவது சாரணர் குழுவின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ். கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.
குருதிக்கொடையில் அனைத்துக் குருதிக்கொடையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஒ-14,66)

## சேவை நலன் பாராட்டு விழா

மன்னார், ஜன. 21
மன்னார் மாவட்டத்தில் நீண்ட கால மாக மருத்துவ சேவை செய்து பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இரண்டு மருத்துவர்கள் மற்றும் பிராந்திய மேற்பார்வை பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர் ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டு விழா, முருங்கன் டொன் பொஸ்கோ விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தர்மராஜா வினோதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மருத்துவர் வெற்றிநாதன், மருத்துவர் செல்வி.ஸ்ரீதேவி வேதவனம், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர் வடுவத்த ஆகியோர் நினைவுப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(ஒ-14,213)


### பணிப்பெண் தேவை

ஊர்காவற்துறையில் வசிக்கும் வயோதிப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 440 7103, 076 922 0723

(CS 48689)(3/6)

### கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு

Hotel Managment / Health care
போன்ற துறைகளில் Work Permit எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் Student Visa விற்கான ஆலோசனைகளும் அனுமதிகளும் கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்

CANADA MIGRATION PILOT

திகதி- 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி
கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

CIMS COLLEGE 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் 0777-068-777


## அருணோதயக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 21
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
கல்லூரி முதல்வர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக நீர் முகாமைத்துவ நீர்ப்பாசனப் பணிப்பாளர் பொறியியலாளர் ந.யோகராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

(ஒ-14,63)


# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் சிவகுமாரன்

(இராசு வாத்தியார், இளைப்பாறிய ஆசிரியர்)



தோற்றம் 01.04.1953 மறைவு 18.01.2023

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவகுமாரன் அவர்கள் கடந்த (18.01.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் இராசமணி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும், இணுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லதம்பி நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், ஜெயராம் (Swiss), ஹரிஜன் (Swiss), அரிகரன் (உத்தியோகத்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்), கோகுலறாம் (விவசாயப் போதனாசிரியர் - புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரவீனா (Swiss) அவர்களின் மாமனும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் செல்வகுமார் (London) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தம்பிஐயா, மற்றும் புஸ்பலீலாவதி, சிவயோகமணி ஆகியோரின் பெறா மகனும், காலஞ்சென்றவர்களான கணேசரத்தினம், அரியராசா, செல்வராசா மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் மருமகனும், சத்தியவதி, குமரவேள், அமிர்தநாயகி, விக்னராஜா, பங்கயற்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்கல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமரஸ்தான்"
செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 614 4910

(CS 23042)(3/6)

### வான் விற்பனைக்கு

EVRY SUZUKI உற்பத்தி
வருடம் 2015 முதல் பதிவு 2019
விலை 43 லட்சம் ரூபா
T.P : 074 292 5923

### English Classes

Gr 01 to O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்
Grammar with School Book
T.P : 077 331 4608 யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு

#### நில்பரப்பு

- ஆதிசிவன் முத்துமாரி அம்மன் கோவில் வீதியில்.
- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தென்மராட்சி கலைமன்றம் 100 மீ தூரம்.
- அரச வங்கி, தனியார் வங்கி 200 மீ தூரம்.
- சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் 300 மீ தூரம்.
- அமைதியான சூழல், நல்ல தண்ணீர்.




பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 784 0379 Viber, Whatsapp
077 467 2408
074 0015 380

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

#### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 9865 457
077 8147 389


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org